தொகுதி மக்கள் ஒரே தாலுக்காவை பயன்படுத்த வழிவகை செய்ய வேண்டும்!

திரு.வி.க. நகர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்திடுவீர்!

சட்டப் பேரவையில் உறுப்பினர் ப.தாயகம் கவி வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 28– சட்டப் பேரவையில், திரு.வி.க. நகர் தொகுதி உறுப்பினர் ப.தாயகம் கவி பேசுகையில், திரு.வி.க. நகர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்திட வேண்டும். தொகுதி மக்கள் ஒரே தாலுக்காவை பயன்படுத்த வழிவகை செய்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பேரவையில் உயர் கல்வி, பள்ளிக் கல்வி மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளின் மானியக் கோரிக்கையில் திரு.வி.க. நகர் தொகுதி உறுப்பினர் ப.தாயகம் கவி பேசியதாவது:

அடியெடுத்து வைப்பதிலே அறிஞர் அண்ணாவை, படை நடுங்க வைப்பதிலே தந்தை பெரியாரை, கருத்துகளை பொழிவதிலே முத்தமிழறிஞர் கலைஞரை, எங்களுக்கு நாளும் நினை வூட்டிக் கொண்டிருக்கிற கழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) வெல்லுகின்ற விழியாலும், கள்ளமற்ற சிரிப்பினாலும், செல்வாக்கு, பெருமை இவை சிறிதேனும் கருதாமல் எல்லோரிடத்திலும் ஒட்டி உறவாடுகின்ற தன்மையாலும், எங்களது இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கிற கழக இளைஞரணிச் செயலாளர், எதிர்காலத்தில் இந்த இயக்கத்தையும், தமிழ் நாட்டையும் வழிநடத்த இருக்கின்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அவையின் முன்னவர், அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அனைவருக்கும் என் வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள், தினமணி எனும் தமிழ் நாளேடு 7வது பக்கத்தில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையின் தலைப்பு "அன்று அண்ணா! இன்று ஸ்டாலின்!" என்பதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கட்டுரையில், "மத்தியில் இருக்கின்ற ஆளுங்கட்சியையும், மாநிலத்தில் இருக்கின்ற ஆளுங்கட்சியையும் ஒருசேர எதிர்த்து நின்று பேரறிஞர் பெருந்தகை அண்ணாவிற்குப் பின்னால் தமிழகத்தில் ஆட்சி அமைக்கவிருக்கின்ற தி.மு.க.வின் தலைவர் ஸ்டாலின் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நாளையதினம் தன்னுடைய விஸ்வரூபத்தை எப்படிக் காட்டுவார் என்பதை அடுத்து வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் தான் முடிவு செய்யும்" என்று சொல்லியிருந்தது.

தினமணி நாளேடு சொன்னபடி, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40ஐ வென்று காட்டி தன்னுடைய விஸ்வரூபத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா முழுமைக்கும் முதலமைச்சர் அவர்கள் வெளிக்காட்டியிருக்கின்றார்.

பள்ளிக் கல்வித் துறை மானியத்தில் பேசுகின்ற இந்தத்தருணத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை இருக்கிறது. என்னுடைய திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி அமைத்திட வேண்டுமென்றும், அதைப்போலவே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் என்னுடைய திரு.வி.க.நகர் தொகுதியில் இருக்கின்ற மக்கள் புரசைவாக்கம் தாலுகா, பெரம்பூர் தாலுகா, அயனாவரம் தாலுகா என்று 3 தாலுக்காக்களுக்கு சென்றுவருகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இனிவரும் காலங்களில் என்னுடைய திரு.வி.க. நகர் தொகுதி மக்கள் ஒரே தாலுக்காவை பயன்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் முதலில் கேட்டுக்கொண்டு, என் தொகுதி சார்ந்த கோரிக்கைகளை பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடத்தில் அளிக்கிறேன். அதை நீங்கள் விரைந்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, தலைப்புக்குள் செல்கிறேன்.

விடுதலை பெறுவதற்கு இருக்கின்ற வழிகளில் முதலாவதாக இருப்பது கல்வி என்று சொன்னார் தந்தை பெரியார். நாம் பயணிக்கின்ற பாதையில் நம்மோடு கடைசி வரை துணையாக வருவது கல்வி என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும் என்று சொன்னார் முத்தமிழறிஞர் கலைஞர். நம்மிடமிருந்து யாராலும் திருட முடியாத ஒரே சொத்து கல்வி என்று சொன்னார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மனித குலத்தில் பிறந்தவர்களுக்கு இன்றியமையாதது கல்வி. அந்தக் கல்வியை முன்னெடுத்துச் செல்லுகின்ற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய முன்னெடுப்பிலே சமீபத்தில் அந்தத் துறையின் சார்பில் ஐம்பெரும் விழா நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அந்த ஐம்பெரும் விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது, தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிந்தவுடன், நான் பங்கேற்கின்ற முதல் அரசு விழாவாக பள்ளிக் கல்வித் துறையின் விழாதான் இருக்க வேண்டுமென்று, அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்திருந்ததாக முதல்வர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்.

படியுங்கள் - படியுங்கள்!

மேலும், அவர் பேசுகின்றபோது, ஒன்றைச் சொன்னார். நான் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் அதிகம் பங்கேற்பது வழக்கம். ஆனால், என்னைவிட அதிகமாக, என்னைவிட ஆர்வத்துடன் பங்கேற்கும் ஒருவர் இந்த மேடையிலே இருக்கிறார். அவர் வேறு யாரும் அல்ல; அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்தான் என்று பெருமையோடு (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்டார். மேலும், முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகின்றபொழுது, அங்கே குழுமியிருந்த மாணவர்களை நோக்கி முக்கியமான ஒன்றைச் சொன்னார். எவ்வளவோ நிதி நெருக்கடியில் இந்த அரசாங்கத்தின் சார்பில் இந்தத் துறைக்கென்று நான் தினம் தினம் புதுப்புது திட்டங்களைத் துவக்கி வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், அது மாணவர்களாகிய உங்களுக்காகத்தான். எனவே, நீங்கள் எனக்காக செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது வேறு ஒன்றுமில்லை. படியுங்கள், படியுங்கள், படித்துக் கொண்டே இருங்கள் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் படியுங்கள், படியுங்கள் என்று சொன்னபொழுது, என்னுடைய நினைவலைகள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றிய கவிதை வரிகள் நோக்கிச் செல்லுகிறது.

நூலைப் படி - சங்கத் தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படிசங்கத்தமிழ்
நூலைப்படி
காலையில் படி கடும் பகல் படி
மாலை இரவு பொருள் படும்படி நூலைப் படி
சங்கத்தமிழ் நூலைப் படி
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி ?
சாதியெனும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி எப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமா மறுபடி
பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூல்களை ஒப்புவதெப்படி ? நூலைப் படி
சங்கத் தமிழ் நூலைப் படி

என்று சொன்னாரே (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அத்தகைய கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் கொண்டும் செல்லும் வண்ணம் முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசனை பெற்று, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஊர்ஊராகச் செல்லுகிறார். பள்ளிகளை ஆய்வு செய்கிறார். தேர்வு நேரங்களில் பள்ளிக்கு செல்கிறார். மாணவர்களைச் சந்திக்கிறார். வாழ்த்துச்சொல்லி அவர்களை நம்பிக்கை ஊட்டுகிறார். அத்தகைய அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு செய்தியாளர் சந்திப்பின்பொழுது, நிருபர் ஒருவர் கேள்வியை முன் வைத்தார். உங்கள் துறை சார்ந்த விஷயங்களில் முதலமைச்சர் அவர்களின் செயல்பாடுகளை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள் என்பது கேள்வி.

அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன பதில்; பள்ளிக் கல்வித் துறைச் சார்ந்த நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கின்ற போது, பல கேள்விகளை முன்வைப்பார்கள். ஒருசில நேரங்களில், தன்னை ஒரு பெற்றோர் நிலையில் வைத்துக்கொண்டு ஒருசில கேள்விகளை முன் வைப்பார். ஒருசில நேரங்களை தன்னை ஓர் ஆசிரியர் நிலையில் வைத்துக் கொண்டு சில கேள்விகளை முன்வைப்பார். ஆனால், நாங்கள் அவர் கேட்கின்ற அனைத்து கேள்விகளுக்கும் பதில் சொல்லியாக வேண்டும். இதுதான் எங்கள்முன் உள்ள மிகப் பெரிய சவால் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

எனவே, பள்ளிக் கல்வித் துறையின்மீது இவ்வளவு ஆர்வம் கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒவ்வோர் ஆண்டும், பள்ளிக் கல்வித் துறைக்கென்று ஒதுக்குகின்ற நிதியினைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே பிரமிப்பாக இருக்கின்றது. காரணம், 2021-2022 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை என்பது ரூ.32,599 கோடி ரூபாய், 2022-2023 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை என்பது ரூ.36,895 கோடி ரூபாய், அதேபோல், 2023-2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை என்பது ரூ.40,299 கோடி ரூபாய், அதேபோல் 2024-2025 ஆம் ஆண்டுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ.44,042 கோடி ரூபாய். (மணியடிக்கப் பெற்றது)

திட்டங்களால் பயன் பெற்றோர்!

எனவே, இப்படி ஒதுக்கப்பட்ட தொகை மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தினம், தினம் துவங்கி வைக்கப்படும் திட்டங்களைப் பார்க்கும்போது, அந்தத் திட்டங்களால் பயன்பெறுகின்ற மாணவர் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே நெஞ்சம் பெருமிதம்கொள்கிறது. புதுமைப் பெண் திட்டத்தால் பயன்பொறுவோர் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டோர், எண்ணும் எழுத்தும் திட்டத்தால் பயன்பெறுவோர் எண்ணிக்கை 24 இலட்சம் பேர் அதேபோல் இல்லம் தேடி கல்வியால் பயன்பெறுவோர் எண்ணிக்கை 27 இலட்சம் பேர் அதேபோல, நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெறுவோர் எண்ணிக்கை 28 இலட்சம் பேர், வாசிப்பு இயக்கம் என்னும் திட்டத்தால் பயன்பெறுவோர் 30 இலட்சம் பேர். இன்றைக்கு அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 16ல் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றன. கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 17ல் குறிப்பிட்டுள்ளபடி, 22,931 Smart classrooms அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. அதேபோல், கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 23ல் குறிப்பிட்டுள்ளபடி, பள்ளிக் கல்வித் துறையின் சார்பிலே நடத்தப் பெறுகின்ற கலைவிழா போட்டிகளால் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 40 இலட்சத்திற்கும் மேற்பட்டோர். பேராசிரியர் அன்பழகன் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.7500 கோடி ஒதுக்கப்பட்டு, 18 ஆயிரம் வகுப்பறைகள் கட்ட திட்டமிடப்பட்டு அதில் 3,600 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இப்படி தமிழக முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை சொல்லிக் கொண்டே சென்றால் நேரம் போதாது என்பதால், ஒரேயொரு செய்தியைமாத்திரம் உங்கள்முன் பதிவு செய்து விடைபெறுகின்றேன்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று சொன்னார், வள்ளலார். அவரைப் போலவே, காலை நேரங்களில் பசியால் வாடிய இளந்தளிர்களின் பசியைப் போக்க வேண்டுமென்பதற்காக முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்த காலை உணவுத் திட்டத்தின் முதற்கட்டமாக தமிழகத்தில் இருக்கின்ற 1,545 பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலுகின்ற 1,14,095 மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக தமிழகத்திலிருக்கின்ற 31,008 பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலுகின்ற கிட்டத்தட்ட 16 இலட்சம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!

அப்படி செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் எந்தவகையில் பயன் அளிக்கின்றன என்று பார்ப்பதற்காக அதிகாரி பெருமக்கள் தமிழ்நாட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பள்ளிகளில் சுமார் 1,540 பள்ளிகளைத் தேர்வு செய்து அந்தப் பள்ளிகளுக்குச் சென்று இத்திட்டத்தால் என்ன பயன் என்று பார்த்தபோது; 1,540 பள்ளிகளில் 1,319 பள்ளிகளில் மாணவர்களின் வருகை சதவிகிதம் கூடியிருந்ததைப் பார்க்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பள்ளிகளையும், இத்திட்டம் செயல்படுத்தப்படாத பள்ளிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அங்கும் மாணவர் வருகை சதவிகிதம் 77 சதவிகிதமாக உயர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இப்படி, முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தால் மாணவர்களின் வருகைப் பதிவுமாத்திரமல்ல, மாணவர்களின் சேர்க்கை விகிதமும் கூடியிருக்கிறது. அதோடு மாணவர்களின் கற்றல் திறனும் கூடியிருப்பதாக கல்வியாளர்கள் பெருமிதம்கொள்கிறார்கள்.

எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல்வேறு நிதி நெருக்கடியில் மாணவர்கள் கல்வி கற்கவேண்டுமென்று அனுதினமும் பாடுப்பட்டுக்கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள் இந்தத் தருணத்திலும் மீண்டும் என்னுடைய நினைவுகள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய கவிதையை நோக்கி செல்கிறது.

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்விகற்றுப்
பன்னறும் கலைஞானத்தால்,
பராக்கிரமத்தால், அன்பால்,
உன்னத இமமலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

என்று புரட்சிக் கவிஞர் சொன்னார். அந்தப் புரட்சி கவிஞர் கேட்ட அந்நாள் வேறு எங்கும் இல்லை, தமிழ்நாடு முதலமைச்சரின் ஆட்சி நடைபெறுகின்ற இந்நாள்தான், இந்நாள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, தந்த வாய்ப்பிற்கு நன்றித் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

திரு.வி.க.நகர் தொகுதி கோரிக்கைகள்!

மழைக் காலத்தில் ஜமாலியா, மேட்டுப்பாளையம், பட்டாளம், ஓட்டேரி போன்ற பகுதிகளில் மழைநீர் தேங்கி வெளியேற வழியில்லாமல் உள்ளது. எல்லா கால்வாயையும் தூர்வாரி கரையைப் பலப்படுத்த வேண்டும்.

ஓட்டேரி பகுதியில் தொழில் முனை வோருக்கான பயிற்சி மையமும், தொழிற்கடன் பெற வழிவகையும் செய்து தரவும் வேண்டும்.

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத்தர வேண்டுகிறேன்.

திரு.வி.க. நகர் 71வது வட்டத்தில் உள்ள அருந்தியர் மக்களுக்கான செருப்புத் தைக்கும் கூடம் குடியிருப்புகள் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் பகுதியில் குடிசை வீடுகளை அகற்றி புதிய குடியிருப்புகளை அமைத்துதர வேண்டும்.

செருப்புத் தைக்கும் போது குப்பைகளாகச் சேருகின்ற தோல் கழிவுகளை அகற்றவும் சுகாதாரமாகவும் வாழ, சாலை வசதி மற்றும் கழிப்பிட வசதிகளை மேம்படுத்தித்தர வேண்டும்

விளையாட்டு வீரர்கள் அதிகம் வாழும் பகுதியான பெரம்பூர் பாலம் அருகில் பூங்காவின் காலியிடத்தில் இறகு பந்து விளை யாட்டரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

73வது வட்டத்தில் புதிய நியாய விலைக் கட்டடமும், வாழைமாநகர் பகுதியில் சமூக நலக் கூடமும் மற்றும் வெங்கட்டம்மாள் சமாதி தெரு பகுதிக்கு உடற்பயிற்சிக் கூடமும் அமைத்துத்தர வேண்டும்.

திரு.வி.க. பகுதிக்கு கூடுதல் பேருந்து வசதி செய்திட வேண்டும்.

இவ்வாறு ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. பேசினார்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் கடிதம்!

புதுடெல்லி, ஜூன் 28-

மீனவர்களின் நலன் காக்க ஒன்றிய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது மற்றும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவது தொடர்பாக கடந்த சில தினங்களாக ஒன்றிய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியிருந்தார்.இதற்கு நேற்று பதில் கடிதம் எழுதியுள்ள ஒன்றிய அமைச்சர், "மீனவர்கள் பிரச்சனை தொடர்பாக நீங்கள் ஜூன் 19, 24 மற்றும் 25ம் தேதிகளில் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. ஜூன் 26ஆம் தேதியின் விவரங்களின்படி, 34 இந்திய மீனவர்கள் இலங்கையில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆறு பேர் தண்டனை பெற்று தண்டனை சிறை வாசம் அனுபவித்து வருகிறார்கள்.

கொழும்புவில் உள்ள இந்திய தூதரகம், யாழ்பாணத்தில் உள்ள துணைத் தூதரக அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு, கைது செய்யப்பட்டவர்களை முன் கூட்டியே விடுவிக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடந்த 10 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். மீனவர்களின் நலன் காக்க ஒன்றிய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்திய மீனவர்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்'என்று கூறியுள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணை தெற்கு ஒன்றியம், வீரமூர் மற்றும் டி.புதுப்பாளையம் ஆகிய பகுதிகளில் பொது மக்களிடம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் க.பொன்முடி, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர்நே.சிற்றரசு ஆகியோர் வாக்கு சேகரித்தனர். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, லட்சுமணன் எம்.எல்.ஏ., காணை தெற்கு ஒன்றிய செயலாளர் கல்பட்டு வி.இராஜா, சென்னை மேற்கு மாவட்ட பகுதி கழக செயலாளர்கள் ந.இராமலிங்கம், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், எஸ்.மதன்மோகன், ச.பரமசிவம், வினோத் வேலாயுதம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர்

பொன்குமார் பிறந்தநாள் நிகழ்ச்சி - கருத்தரங்கம்!

சென்னை - சர். பிட்டி தியாகராயர் அரங்கில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 28-

இன்று (28ஆம் தேதி) சர் பிட்டி தியாயராயர் அரங்கில் விவசாய - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பிறந்தநாள் நிகழ்ச்சி. நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளும் - தொழிலாளர் நிலையும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடை பெறுகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவரும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் பிறந்த நாள் நிகழ்ச்சி இன்று (28ஆம் தேதி - வெள்ளிக்கிழமை) தி.நகர், சர்பிட்டி தியாகராய அரங்கு தி.நகரில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் இருந்து கட்சியின் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் தலைவர் பொன்குமார் அவர்களின் பிறந்தநாளை கட்டுமானத் தொழிலாளர்கள் தினமாக கொண்டாடுவது வழக்கம். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ஜூன் 28ஆம் தேதி கட்டுமானத் தொழிலாளர்கள் தினத்தை, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலும் தொழிலாளர்களின் நிலையும் என்ற தலைப்பில் கருத்தரங்க நடைபெற உள்ளது.

கடந்த பத்தாண்டு கால பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு ஆதரவான 40க்கும் மேற்பட்ட சட்டங்கள் நான்கு கோடுகளாக மாற்றப்பட்டு முதலாளிகளுக்கு ஆதரவான குறிப்பாக, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான நிலையை பாரதிய ஜனதா கட்சி கையாண்டது. இந்த முறை மீண்டும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றாலும் கூட்டணி கட்சிகளின் தயவில் ஆட்சி நடத்த வேண்டிய நிலைக்கு மோடி தள்ளப்பட்டுள்ளார். எதிர்க்கட்சிகள் வலுவான நிலையில் உள்ளதால் மோடி அரசால் தான்தோன்றித்தன மாக எந்த சட்டங்களையும் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த நிலையில் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்து கருத்தரங்கு நடைபெற உள்ளது. இந்த கருத்தரங்கில் பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டு தங்கள் உரைகளை நிகழ்த்த உள்ளனர். இந்த நிகழ்ச்சிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் என்.சுந்தராஜ் தலைமை தாங்குகிறார். கட்சியின் பொதுச் செயலாளர் பொறி.எஸ்.ஜெகதீசன், கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்புச் செயலாளர் எஸ்.யுவராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

சமூக நீதி சத்திரியர் பேரவை இணைப் பொதுச் செயலாளர் எஸ்.எம். குமார், தமிழ்நாடு விவசாயிகள் -தொழிலாளர்கள் கட்சி இளைஞரணிச் செயலாளர் வினோத் பொன்குமார், பொதுச் செயலாளர்கள் வி.சுப்பராயலு, ஜெகமுருகன், பொருளாளர் ஆர்.சேகர், துணைத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி, என்.லட்சுமணன், ஜெ.எல்.குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்த நிகழ்ச்சியை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி, தமிழக கட்டடத் தொழிலாளர் மத்திய சங்கம், கட்டுமான மற்றும் மனைத் தொழிலில் கூட்டமைப்பு, சமூக நீதி சத்திரியர் பேரவை ஆகிய இயக்கங்கள் இணைந்து நடத்துகின்றன.

இந்த நிகழ்ச்சியில் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கட்சியின் பொதுச் செயலாளர்கள் என்.சுந்தராஜ், பொறி.எஸ்.ஜெகதீசன், வி.சுப்புராயலு, ஜெகமுருகன் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.